[1981 ஜனவரி 23

3. அறிவிப்புகள்.

அ. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

'' தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள்விதி (1)-ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் இரண்டாம் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (panel of chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு
3. திரு. என். எஸ். வி. சித்தன்
4. திரு. எஸ். சிவசாமி.

ஆ. உறுப்பினர் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த உறுதி மொழி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு மற்றும் ஓர் அறிவிப்பு.

தேர்தல் மனு எண். 11/1980-இன் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் கேட்டுக்கொண்டதற்கிணங்க திரு. கி. சட்டநாத கரையாளர் அவர்கள் தான் சார்ந்துள்ள கட்சி பற்றி அளித்த உறுதிமொழியின் உண்மை நகல் ஒன்று பதிவு அஞ்சல் மூலமாக சென்னை உயர்நீதி மன்றத்துக்கு அனுப்பி வைக்கப் பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: நான் கொடுத்திருக்கும் ஒத்தி வைப்புத் தீர்மானம்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானங்கள் நாளையிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, விதி 73-ன் கீழ் * * * * * * ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபையில் அதைப்பற்றிப் பேச நான் அனுமதிக்கவில்லை.

திரு ப. நெடுமாறன்: அதைப்பற்றி நான் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.